தஞ்சாவூர், பூதலூர் பகுதிகளில் நிலக்கடலைப் பயிர்கள்

*267 வின.—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தஞ்சை, பூதலூர் பகுதிகளில் புழுக்களின் காரணமாக நிலக் கடலைப் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளது உண்மையா?

(இ) இதை தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) நிலக்கடலை யில் சிவப்புக் கம்பளிப்பூச்சி சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தஞ்சாவூர் வட்டாரத்தில் வல்லம் பகுதிகளிலும் பூதலூர் வட்டாரத்தில் செங்கிப்பட்டி பகுதிகளிலும் தோன்றியது.

(இ) இப்பூச்சி தோன்றுவதற்கு முன்பாகவே சென்ற ஆண்டு ஜூலை மாதத்திலிருந்தே விவசாயிகளுக்கு பிரசுரங்கள் மூலமும் விரிவினைப் பணி யாளர்கள் மூலமும் வானெலி மூலமும் தடுப்பு முறையாக மருந்தடிக்க வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. சென்ற ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் முதல் தடவையாக பூச்சி தோன்றிய தருணத்தில் 1,270 ஏக்கர் களிலும் இரண்டாவது முறையாக அக்டோபர் மாதத்தில் தோன்றிய தருணத்தில் 1,210 ஏக்கர்களிலும் மருந்தடித்துப் பூச்சிகள் கட்டுப்படுத்தப் பட்டன.

முற்பகல் 10-00 திரு. வை சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இம்மாதிரி பூச்சிகள் மறு படியும் வராமலிருக்க ஆரம்பத்திலேயே இதைக் கவனித்து தடுத்து நிறுத்த ஏற்பாடு செய்யப்படுமா? சென்ற ஆண்டு இந்த பூச்சி வந்ததன் காரணமாக எவ்வளவு ஏக்கர் பாதிக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, பூச்சிகள் உடனே தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டதாகத்தான் குறிப்பில் இருக் கிறது. பூச்சி பிடிக்காமல் இருப்பதற்காக என்னென்ன எதிர்ப்பு முறைகள் எடுக்கவேண்டுமென்றுதான் 'எக்ஸ்டன்ஷன் ஆபீஸர்கள்' மூலமாகவும், வானெலிகள் மூலமாகவும் பிரசாரம் செய்து அவ்வப்போது அறிவித்து கொண்டு இருக்கிறோம். கவனக்குறைவாக உள்ள விவசாயிகள் இருப்ப தினுலே பூச்சி வருகிறது. அப்படியே வந்தாலும் இலாகா தடுப்பு நடவடிக்கை எடுத்துத் தடுத்து வருகிறது. கடந்த ஆண்டிலே எந்த இடத் திலும் நாசம் ஏற்படவில்லை. தடுக்கப்பட்டிருக்கிறது.

Film Projector for Coimbatore Agricultural College.

*268 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state whether a number of 35 m.m. projector with accessories were purchased for the Agricultural College at Coimbatore during October-November 1969 ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : 35 மி.மீ. திரைப் படம் காட்டும் கருவி ஒன்று வாங்கப்பட்டு, பொதுப்பணித்துறை மின்சாரப் பொறியாளரால், கோயம்பத்தூரில் உள்ள வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தில் நிறுவப்பட்டு வருகிறது.